# பேச்சுப் போட்டியில் வாய்மொழித் தொடர்பாடல் பகுதி

## மூன்றாம் வகுப்பு - மாதிரி வினாக்கள்

கேள்விகள் பேச்சு வழக்கில் கேட்கப்படும். உ+ம்: "உங்கட பேர் என்ன?". மாணவர்கள் கேள்வியை விளங்கிக் கொள்ளாதவிடத்து, ஒத்த சொற்களைப் பயன்படுத்தியோ அல்லது எழுத்து வழக்கிலோ கேள்விகள் கோட்கப்படும். உ+ம்: கூறுங்கள் = சொல்லுங்கள் / மிருகம் = விலங்கு.

1. வணக்கம். உங்கள் பெயர் என்ன?
   எந்தப் பாடசாலையில் படிக்கின்றீர்கள்?

2. உங்கள் வீட்டில் யார் யார் இருக்கின்றார்கள்?
   வீட்டில் உங்களுக்கு யாரை அதிகம் பிடிக்கும் (விருப்பம்)?
   ஏன் அவரைப் பிடிக்கும்?

3. உங்கள் நண்பரின் பெயர் என்ன?
   நீங்கள் நண்பர்களுடன் என்ன விளையாடுவீர்கள்?
   இந்த விளையாட்டுப் பற்றிக் கூறுங்கள்?

4. உங்களுக்குப் பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி எது?
   அதைப் பற்றிக் கூறுங்கள் (சொல்லுங்கள்)?

5. தமிழ் வருடப் பிறப்பு அல்லது கிறிஸ்மஸ் பண்டிகையை எவ்வாறு கொண்டாடுவீர்கள்? (உடைகள் / செல்லும் இடங்கள் / சந்திக்கும் ஆட்கள் / உணவு / நிகழ்வுகள்).

6. நீங்கள் என்ன உணவு வகைகளை (உணவுகளை) உண்பீர்கள்?

7. வேறு ஏதாவது நீங்கள் எங்களுக்குச் சொல்ல விரும்புகின்றீர்களா? அதைக் (அவற்றைக்) கூறுங்கள்?

நன்றி.